Edited by the Swami Vallinayakam.

# THE VIVEKABHANU

## A MONTHLY TAMIL JOURNAL.

## விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"—திருக்குறள்.

வால்யூம் I] ஜூலை [புத்தகம் 11

# SREE BHAGAVAT GITA KUMMI.

# ஸ்ரீ பகவத் கீதைக் கும்மி.

## நூல்.

### 1-வது அருச்சுனன் சோக அத்தியாயம்.

பாரதயுத்த காலத்தில் நிகழும் சகல சங்கதிகளையும் குருடனான திருதராஷ்டிரனுக்குத் தெரிவிப்பதற்காக, அவ் யுத்தத்தில் கண்ணெதிராகவும் மறைவாகவும் நடக்கும் சகலமும் நன்குவிளங்கும்படி வேதவியாச பகவானால் அநுக்கிரகிக்கப்பட்டிருந்த சஞ்சயன், அந்தத் திருதராஷ்டிரனை நோக்கி "துரியோதனன் முதலிய கவுரவரும் தருமபுத்திராதிகளாகிய பாண்டவரும் தங்கள் தங்கள் சேனைகளோடு யுத்த சன்னத்தர்களாய்க் குருக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தார்கள்" என்று சொல்ல, அவ்வாறு சேர்ந்தவர்கள் யாது செய்தார்கள் என்று கேட்ட

### திருதராஷ்டிரனுக்குச் சஞ்சயன் சொன்னது.

1 தரும க்ஷேத்திர மாகுரு க்ஷேத்திரக்
தன்னிற்போர் செய்யச்சேர் தன்னவர்கள்
தருமர்முன் னோர்செய்த தென்னை யெனுந்திரு
தராஷ்டிரற் குச்சஞ் சயன் சொல்லுவான்.

(இதன்பொருள்) "தரும க்ஷேத்திரமாகிய குரு க்ஷேத்திரத்திலே போர் செய்யும்படி கூடிய என்னுடையவர்களும் தருமபுத்திராதியரான பாண்டவர்களும் என்ன செய்தார்கள்?" என்ற திருதராஷ்டிரனுக்குச் சஞ்சயன் சொல்கின்றான்.

குறிப்பு:—முன்னோர்—முதலானவர்கள். வியாக்கியானம்:—திருதராஷ்டிரன் என்ற பதம் சுத்தமான தமிழில் திருதராட்டிரன் எனவரும் அவ்வாறு வருதலே சிறப்புடையது; இங்கே ஓசைபற்றி திருதராஷ்டிரன் எனப்பட்டது.

இந்நூலில், மூலநூலில் உள்ளவற்றை யுள்ளபடியே வெளியிடக் கருதியிருத்தலால், வடமொழி வடிவத்தோடு கூடிய சகல பதங்களையும் செந்தமிழுருச் சொற்களாகத் திரிக்க முயன்றால் பொருள் கருகுதலாவது ஓசை குன்றுதலாவது நேருமென்று அவ்வாறு செய்யவில்லை. அன்றியும், இந்நூல், தேர்ந்த வித்வான்கள் மட்டும் படித்தற்குரிய அதிகாரிகளாகக் கருதாமல் கற்றோரும் மற்றோரும் வாசிக்கும்படி பாமர பண்டித ரஞ்சிதமாக இயற்றப்பட்டிருத்தலால், வடமொழிப் பிரயோக விஷயத்தில் முதிர்ச்சியான ஆன்றோர் முறைமை பூரணமாக அநுசரிக்கப்படவில்லை. ஆன்றோர் நூல்களுள்ளும் சில சில இடங்களில் வடமொழி வடிவப் பதங்கள் அவ்வடிவத்தோடேயே வழங்கப் பட்டிருத்தல் பலருக்கும் தெரியும்.

மூலக்கிரந்தத்தின் ஒவ்வொரு சுலோகமும் இம்மொழி பெயர்ப்பில் ஒவ்வொரு பாட்டாகச் செய்யப்பட்டிருக்கிறது.

தர்மமென்று மூல நூலில் முதலில் பிரயோகிக்கப்பட்ட சொல்லே, இம்மொழி பெயர்ப்பிலும் ஆரம்பத்தில் எடுத்தாளப்பட்டது.

கீதையின் துவக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் தரும சத்தப் பிரயோகத்தினால் அந்நூல் இடையூறின்றி நிறைவேறுதற்கும் அதனை வாசிப்போர் கேட்போர்க்கு மங்களம் உண்டாகுதற்கும் மங்களாசரணஞ் செய்யப்பட்டிருக்கிறதென்று கீதா வியாக்கியான கர்த்தர்கள் எடுத்துரைத் திருக்கின்றனர். தருமம் என்ற சொல். இருபத்தொரு மங்கலச்சொற்கள் அல்லது அவற்றின் பரியாய பதங்களுளொன்றாக இல்லையாயினும். சகல மங்கலத்துக்கும் காரணமான புண்ணியமென்று பொருள்படும் சொல்லாயிருத்தலால் அதனை வடமொழிவாணர் மங்கள மொழியாகக் கொண்டார்கள் போலும்.

தருமக்ஷேத்திரத்தில் சண்டை செய்யும்படி கூடியது ஆச்சரியம் அல்லது பரிகாசத்துக் கிடமானதென்ற பொருளும் துரியோதனுடைய பாண்டவருடைய குலத்தின் மூலபுருஷனாகிய குரு மஹாராஜனது பெயரால் விளங்கிக் குருகுலம் விருத்தியடைதற்குரிய குரு க்ஷேத்திரத்தில் அக்குருகுலம் நாசமாதற்கேதுவான யுத்தத்தைச் செய்யும்படி குருகுலத்தோர் கூடியது விபரீதம் என்ற பொருளும் தொனிக்கின்றன.

இரண்டாம் அத்தியாயம் 11—ம் கவி முதல் 18—ம் அத்தியாயம் 73—ம் கவிவரை கண்ணபிரான் அருச்சுனன் இவர்கள் கூறிய மொழிகளும் மறுமொழிகளுமே கீதை. முதல் அத்தியாயம் முழுவதும் இரண்டாம் அத்தியாயம் 10-ம் கவிவரையும் அக்கீதைக்கு முகவுரையாகவும் 18—ம் அத்தியாயம் 74—முதல 78—ம் கவியாகிய இறுதிக் கவிவரையும் முடிவுரையாகவும் அக்கீதையோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன

திருதராஷ்டிரனுக்குச் சஞ்சயன் சொன்னது.

2 நிரைநிரை யாய்நின்றபாண்டவ சேனையை
தேர்துரி யோதன ராசன்கண்டு
குருவாம் துரோணர் சமீபத்தி லேசென்று
கூறலுற் றான்பின் வருவ தனை.

(இ—ள்) அணியணியாக வகுக்கப்பட்டு நின்ற பாண்டவர்களின் சேனையைத் துரியோதனராசன் பார்த்துத் துரோணாசாரியர் பக்கத்திலே போய்ப் பின்வருமாறு சொன்னான்.

குறிப்பு.—நிரை=வரிசை. நேர்=எதிராக.

துரியோதனன் துரோணருக்குச் சொன்னது.

3 சற்குருவே! உத்தம சீடன் அதிபுத்தி
சாலிதிட்டத்துய்மன் தான் அணியா
நிற்க நிறுத்திய பாண்டு குமாரர்தம்
நீண்ட பெரும்படை காண்டல் செய்வீர்.

(இ—ள்) துரோணாசாரியரே! உம்முடைய சிஷ்யனும் அதிபுத்திசாலியும் துருபதராஜகுமாரனும் ஆன திருஷ்டத்யும்நனாலே அணிவகுக்கப்பட்டிருக்கிற பாண்டவர்களின் பெரியசேனையைப் பாரும்.

குறிப்பு:—காண்டல் செய்வீர்=பார்ப்பீராக.

வியாக்கியானம்:—பீமார்ஜுனர்களோடும் அவர்களையொத்த வீரராகிய சாத்தகி முதலியவர்களோடும் கூடிய பாண்டவ சேனையைத் துரியோதனன் கண்டு பயந்து அப்பயத்தைத் தீர்த்தற்குரியவர் துரோணாசாரியரென்று அவர்பாற்சென்று அச்சேனை தன் சேனையினும் அதிக பலமுள்ளதென்று சொல்ல உத்தேசித்து அவ்வாறு சொல்வதனால் துரோணருக்குக் கோபம் உண்டாமென்று கருதி அக்கோபம் உண்டாகாதபடி "உம்முடைய சிஷ்யனால் அணிவகுக்கப்பட்ட சேனை" என்று கூறினான். அன்றி அச்சேனை அவர் சிஷ்யனால் அணிவகுக்கப்பட்டது என்பதனால் அவருக்குச்சந்தோஷமுண்டாகுமென்பதனைக் கருதியே அவ்வாறு சொன்னான் எனலும் பொருந்தும்.

4 அந்தப் படையினில் யாவரும் வீமன்
அருச்சுனன் போல்அமர் ஆற்றவல்லார்
சந்தப் பெருஞ்சிலை யாளர்கள் சாத்தகி
தக்க விராடன் துருபதனும்.

5 திருஷ்ட கேது வுடன்சேகி தானனும்
திறனும் காசிநே சத்தனும்
புருஜித்து வுங்குந்தி போசனும் மாந்தருட்
போதச் சிறந்த சயிபியனும்.

6 மிக்க பராக்கிரம சாலியு தாமனும்
வீரிய னும்புத்த மௌஜாவும்
தக்க அபிமன்னு வோடு திரௌபதை
மக்களு மாரத ராகவுள்ளார்.

(இ-ள்) அந்தச் சேனையில் பெரிய வில்லையுடையவர்களும் யுத்தத்தில் வீமார்ச்சுனருக்குச் சமானரும் ஆகிய சாத்தகி, விராடராஜன், துருபதராஜன், திருஷ்டகேது சேகிதானன் காசிராஜன், புருஜித்து, குந்திபோஜன், சைப்பியன், யுதாமந்யு, உத்தமௌஜா, அபிமந்யு, திரௌபதை குமாரர் ஆகிய இவர்கள் மஹாரதிகர்களாயிருக்கிறார்கள்.

குறிப்பு:—அமர்ஆற்ற=சண்டை செய்ய. சந்தப்பெருஞ் சிலையாளர்=அழகிய பெரிய விற்களை உடையவர். மாந்தருள்=மனிதருள். போத=மிகவும். மாரதன்=மகாரதன், பதினாயிரம் தேர்க்காரரோடு எதிர்த்துப் போர் செய்வோன்.

மறையோர் சிரேஷ்டரே நமதுபக்கத்தினில்
வல்லராம் சேனைத் தலைவரையும்

அறைகுவேன் யான்நீர் தெரிந்திடும்வண்ணம்
அறிந்து கொள்வீர்மற் றவர்களையே.

(இ—ள்) பிராமண சிரேஷ்டரான துரோணாசாரியரே! நம்முடைய பக்கத்தில் வல்லவர்களும் சேனைத்தலைவர்களுமாக உள்ளவர்களை நீர் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சொல்லுகின்றேன். அவர்களைத் தெரிந்து கொள்ளும்.

குறிப்பு:—மறையோர் = பிராமணர். அறைகுவேன = சொல்லுவேன்.

வியாக்கியானம்:—எதிர்ப்பக்கத்துச் சேனைத் தலைவர்களைப்பற்றிக் கூறிய துரியோதனன் அத்தலைவர்களோடு ஒப்பிடும்படி தன் பக்கத்துச் சேனைத்தலைவர்களைப் பற்றிக் கூறுகின்றான். அவ்வாறு ஒப்பிடச் செய்யும் கருத்துத் துரியோதனனுக்கு இல்லையெனின், தன் பக்கத்துத் தலைவர் சகலரையும் தெரிந்துள்ள துரோணருக்குஅவர்களைப் பற்றிக் கூறவேண்டிய அவசியமில்லை.

8 உம்மொடு வீடுமர் கிருபர் கன்னன்
உயுத்தத்தில் வெல்அசு வத்தாமா
செம்மல் விகருணன் பூரி சிரவசு
செய்ய செயத்தி ரதன்அன்றி,

9 சூரர்பல் லோர்என் பொருட்டுயிர் ஈயத்
துணிந்தோர் பலவகை யாயுதமும்
பூரண மாஉடை யோர்கள் எல்லோர்களும்
போரிலே வல்லோர்க ளாயிருந்தும்.

10 செவ்வையா வீடும ராற்காக்கப் பட்டும்நம்
சேனை திறமை சிறுகியதே .
அவ்விடம் வீமன் புரந்திடும் சேனை
அதிக பலமுள்ள தாதலினால்.

11 நீங்களெல் லாரும் அவரவர்க் கென்று
நியமித்த தானத்தை நீங்காதேப்
பாங்கரும் பீஷ்மரைச் சூழ்ந்தநும் சேனைப்
படுதியி னின்றுகாப் பாற்றிடுங்கள்.

(இ-வ-ள்) நீரும், பீஷ்மரும், கிருபாசாரியரும், கர்ணனும், அசுவத்தாமாவும், விகர்ணனும், பூரிசிரவசும், செயத்திரதனும், ஆகிய இவர்களையல்லாமல் இவர்களையொத்த வேறுபல சூரர்களும் எனக்காக யுத்தத்தில் தங்கள் உயிரைக்கொடுக்கத் துணிந்தவர்களாய்ப் பலவகை யாயுதங்களையும் பூரணமாகத் தரித்தவர்களாய் ஒருவர்போலவே எல்லாரும்யுத்தத்தில் வல்லவர்களாயிருப்பவர்கள் நம்முடைய சேனையிலிருக்கின்றார்கள். அன்றியும் நம்முடைய சேனையானது சேனாதிபதியாகிய பீஷ்மராலே செவ்வையாகக் காக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் நம்முடைய சேனை பலங்குறைந்ததே. அந்தப் பக்கத்தில் வீமனாகிய சேனாதிபதியால் காக்கப்படும் சேனையோ அதிக பலத்தையுடையது; ஆதலால், நீங்களெல்லாரும் அவரவருக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற இடங்களைவிட்டு நீங்காமல் உங்களுக்குரிய சேனைப்பிரிவுகளிலே பீஷ்மரைச் சுற்றி நின்று காப்பீர்களாக.

குறிப்பு:—செவ்வைவா = செவ்வையாக. புரந்திடும் = காக்கும். பாங்கரும் = பக்கமும்.

வியாக்கியானம்:—மற்றவைகளையும் முதல்வைத்து என்னுவதாக் கருதியன்றாதலால் "உம்மொழி" என்று துரியோதனன் துரோணரை முதலிற்கூறினன் பாண்டவசேனைத்தலைவர்களோடு தன் சேனைத்தலைவர்களை ஒப்பிடும்படி துரோணருக்குச்சொன்ன துரியோதனன் தன் சேனைத்தலைவர்கள் எல்லோரும் "உயிரைத்துறந்தோராய் பலவகை யாயுதமும் உடையோர் போரிலே வல்லோர்களா யிருந்தும்" என்றதனால் தன் சேனைத்தலைவர்கள் குறைவற்ற வீரமுடையவர்கள் என்பதைக் குறிப்பித்து, அவர்கள் அப்படிப்பட்டவர்களா யிருந்தும் தன்சேனை, (அடுத்த கவியில் "குருகுலத்தியாருக்கு மூத்தோர் என்ற) விருத்தரும் அதனால் பலஹீனரென்று கருதப்பட்டவருமான பீஷ்மரைச் சேனாதிபதியாக உடைத்தா யிருப்பதனால் கௌமாரதசையிலுள்ள [illegible] வீமனைத் தலைவனாகவுடைய எதிர்ப்பக்கத்துச் சேனையினும் பலக்குறைந்ததென்றுகூறினன்; கூறியவன் அவ்வாறு கூறுவதனால் பீஷ்மருக்கு மனவருத்தம் உண்டாகாதபடி "செவ்வையா[illegible] ரக்ஷிக்கப்பட்டும்" என்று உபசரித்தான். உபசரித்தவன் அவர்பலக்குறைவால் தோஷம் நேரிடாதபடி தன் படைத்தலைவர்கள் அவரவர் தானத்தைநீங்காமல் நின்று பீஷ்மரைச் சூழ்ந்து காப்பாற்றவேண்டும் என்று அவர்களுக்குக் கற்பித்தான்.

V. P. சுப்பிரமணியமுதலியார்.

# THE TRUTH OF THE VEDANTA AND THE SIDDHANTA PHILOSOPHIES.

## * வேதாந்த சித்தாந்தங்களி னுண்மை.

[தொடர்ச்சி]

தத்துவ ஞானமாவது 'தோன்றுகின்ற ரூபரசாதியான சகல சகத்தும் பரப்பிரூபம்; இந்தச்சகத்து வேறாகத் தோன்றினபோதிலும் மாயாமய மானதால் யதார்த்தானுபவத்தில் இல்லவேயில்லை' யென்கிற நிச்சயமே தத்துவ ஞானம். தொர்த்தத்துவத்தை அறிகிறபடியினாலே இதற்குத் தத்துவ ஞானமென்று பெயர்.

இனி வாசநாக்ஷயமாவது இத்தன்மைத்தென உணரவேண்டி முதலில் வாசனையை விசாரிப்பாம்.

வாசனையாவது முன் பின் ஒன்றையும் ஆலோசியாமற் சீக்கிரத்திலுண்டாகாநின்ற குரோதாதி விர்த்திக்கேதுவான சித்தத்தினுடைய சூக்கும அவத்தையாகியசமஸ்காரமானது வாசனையென்று சொல்லப்படும். இந்த வாசனை அநாதிகாலத்தைத் தொட்டு இருதயத்தில் வசிக்கிறபடியினால் இதற்கு வாசனை யென்று பெயர். இந்த வாசனை அசுத்த வாசனை, சுத்தவாசனை யென இரண்டு. இவற்றுள் அசுத்தவாசனை யானது உலகவாசனை, தேகவாசனை, சாஸ்திர வாசனை யென மூன்று பிரிவுகளாக இருக்கும்.

உலகவாசனையாவது சகல ஜனங்களும் நம்மை யெந்தப்படி யிருந்தால் நிந்திக்கமாட்டோர்களோ, தோத்திர மாத்திரம் பண்ணுவார்களோ, அந்தப்படி நடக்கவேண்டுமென்கிற துர் அபிமானம் உலகவாசனையாகும்.

தேகவாசனையாவது தேகமே நாமென்கிற தேகாத்மப் பிரமையினாலும், தேகத்துக்குக்குணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்கிற பிரமையினாலும், தோஷத்தைப் போக்

---

* ஜூன்மாசத்திய சஞ்சிகையில் 235ம் பக்கத்தில் 14 வது வரியில் சிவசம்மதம் என்னும் பதத்தை சிவசம்பந்தமென்று திருத்தியும் 28 வதுவரியில் கிரியையினாலும் என்றபதத்தை யொட்டி பிரயோஜனத்தினாலும் என்றபதத்தைச் சேர்த்தும்வாசித்துக்கொள்க.—பொ மு. மு.

கவேண்டுமென்கிற பிரமையினாலும், தேகவாசனை மூன்றுவிதமாயிருக்கும்: மூட ஜனங்களும், உலோகாயதர்களும், சைதன்னியத்தோடே கூடின தேகமே ஆத்மாவென்று எண்ணுகிறார்கள். இதுதான் தேகாத்மப் பிரமை. இனி, தேகத்துக்குக் குணசம்பாதனை பண்ணுவது, லௌகிகமென்றும், சாஸ்திரீயமென்றும் இரண்டுவிதம். அவற்றுள் ரம்மியமாயிருக்கிற ராகத்தோடேகூடி கானம் பண்ணுகிறதற்காக ஆமணக்கெண்ணெய், மிளகு, நெய் முதலானவைகளைச் சாப்பிடுதல், தேகத்தைத் தொடும்போது அது மெத்துவாயிருக்கிறதற்காகப் புஷ்டியைப் பண்ணத்தக்கதான ஔஷத, ஆகாரங்களைப் புசித்தல் முதலியன லௌகிக குணசம்பாதனை. கங்காஸ்நான முதலியனபண்ணுவதும், சாலக்கிராமாதி தீர்த்த முதலியவற்றைப்புரோக்ஷித்துக் கொள்வதும்சாஸ்திரீயகுணசம்பாதனை.

தேகத்தினுடைய தோஷத்தைப் போக்குவதான வாசனையும், லௌகிக மென்றும் சாஸ்திரீய மென்றும் இரண்டுவிதம். அவற்றுள் வைத்தியசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஔஷதங்கள் உபயோகப்படுத்துதல், முகம் கழுவுதல் முதலியன லௌகிகம். சௌசம், ஆசமநீய முதலானவை சாஸ்திரீயம். இவ்வாறு தேகவாசனை நிர்ணயிக்கப்பட்

சாஸ்திரவாசனை யாவதேதெனில் விளக்குவாம். முமுக்ஷு, அமுமுக்ஷு வென்று இருதிறத்தாருளர். முதலில் அமுமுக்ஷுவைப்பற்றி விசாரிப்பாம். பிறர் மதிக்க வேணுமென்ற டம்பத்துக்காக சாஸ்திர விசாரணைசெய்பவர் பெரியோர் போல அபிநயங்காட்டிப்பொருள் சம்பாதித்தற்காக சாஸ்திர விசாரம் செய்வோர் வித்வான்களாகிய சகலர்களையும் வெற்றி கொள்வதற்காக விசாரஞ்செய்பவர், பிறமதத்தில் புக்கு, இம்மதத்தை நிந்திப்பதற்காக விசாரம் செய்வோர், இவ்வாறு அமுமுக்ஷுக்கள் நால்வகைப்படுவர். இவருள் நாலாவதாகச் சொன்ன அமுமுக்ஷுவுக்கு நீடிய நரகமும், மற்றைய மூவருக்கும் தகுதிக்கேற்பப் புண்ணியமும் பலமாம். இந்த அமுமுக்ஷுக்கள் ஞானாதிகாரிகளல்லர். இவர்களது சாஸ்திர வாசனையை, யாம் இங்குகூற வந்தோமன்று. பின்னரோ முமுக்ஷுக்களைப் பீடிக்கத்தக்க வாசனையைப்பற்றிப் பேசப்புகுந்தாம்.

முமுக்ஷுக்களும் இரண்டுவித மாவர். முத்தியை யடையவேண்டுமென்ற அதி தீவிர இச்சையுடன், பிரதிபந்தத்தோடு கூடியிருந்து கொண்டு சற்குருவை யடைந்து, ஞானதீட்சை பெற்று சாஸ்திர விசாரணை செய்பவரும், பிரதிபந்தத்தை நீங்கி சற்குருவை யடைந்து ஞானதீட்சை பெற்று சாஸ்திர விசாரணை செய்பவருமாமென்க.

இவர்கள்தாம் முத்தியடைதற்குரித்தான உத்தமர்கள். இதன் விரிவை உண்மைநூலிற் கண்டுகொள்க. இம்முமுக்ஷுவில் சிலர் சாஸ்திரவிசாரணை பூர்த்தியானதின் பின்னும் அதனிடத்துள்ள பற்றுதலினால், மேல் வேண்டற்பாலதான நிதித்தியாசனாதி அப்பியாசங்களைச் செய்து மனோநிவிர்த்தி யடையாமல் மனோநிவிர்த்திக் கேதுவாய் மீண்டும் சாஸ்திரத்திலேயே பிரவேசிக்கின்றார்கள். இவ்வாசனையை அசுத்தவாசனையிற் சேர்ந்த சாஸ்திர வாசனை யென்று கூறுவர். அச்சாஸ்திர வாசனையும், சாஸ்திர பாட அபிமான மென்றும் சாஸ்திர அர்த்த அபிமான மென்றும், சாஸ்திர அர்த்த அனுட்டான அபிமான மென்றும் மூன்றுவிதமாம். தான் மனனம் பண்ணியிருக்கும் சாஸ்திரங்களின் மேலுள்ள அபிமானம் சாஸ்திர பாட அபிமானம். அப்படியே தான்கற்ற அநேக சாஸ்திரங்களிலுள்ள அர்த்தத்தில் அபிமானம், சாஸ்திர அர்த்தாபிமானம். தான்அனுட்டித்து வரும் அனுட்டானங்களில் அபிமானம், சாஸ்திர அர்த்தஅனுட்டான அபிமானம். இந்த மூன்றுவித வாசனையும், பரம புருஷார்த்தத்திற்குத் தடையாகின்ற படியினால் அசுத்த வாசனையா மென்க, சற்குருவை யடுத்து, விசாரணை செய்

யும் நுண்ணிய அறிவுடையோர் இதனையும் பந்தமென்று விடுவர். ஏனையர் அகப்பட் டுழல்வர்.

சுத்த வாசனையாவ தேதென்றால் பிரத்தியேகபின்ன பிரமத்தைத் திடாபரோக்ஷமாக அறிந்த புருஷனிடத்தி லிருக்கப்பட்டதாயும், வறுத்த விதை குதிர் நிரம்புதற்கு மாத்திரம் எப்படி உபயோகப்படுமோ, ருசியான அன்னத்தின் பொருட்டும் பயிருண்டாகிறதின் பொருட்டும் உபயோகப்பட மாட்டாதோ, அப்படிப்போல தேகஞ்சீவித்திருக்கிறதின் பொருட்டு மாத்திரம் உபயோகப்படுகிறதாயும், டம்பம் கர்வம் முதலான அசுரசம்பத்தை உண்டு பண்ணாததாயும், ஜன்மாந்திரத்துக் கேதுவன்றியிலேயு மிருக்கிற வாசனை சுத்தவாசனையாகும். இவற்றுள் அசுத்தவாசனையை யெவ்வித உபாயத்தாலும் பற்றற நீக்குவதே வாசனாக்ஷயம்.

மனோநாசமாவ தேதென்றால் சாவயமாய் அநித்தியமாய் வெகுவிதபரிணாமயோக்கியமாயிருக்கிற திரவியம் மனது. கண்ணுக்கு முன்னே வெளிச்சத்திலிருக்கப்பட்ட கடபடாதியும் காதுக்குச் சமீபத்திற் றிடமாயுச்சரிக்கப்பட்ட சப்தமும் யாதொன்று சாவதானமன்றியிலே போனாலறியப்படவில்லையோ, யாதொன்று சாவதானமாயிருந்தால் அறியப்படுகிறதோ அதுவே சகல விஷய ஞானத்துக்குஞ் சாதாரண காரணமான மனதென்று உண்மை நூல்கள் கூறுகின்றன. அந்தமனது முக்குண காரியமான ஞானம், பிரவிருத்தி மோகமாகிய மூன்றும் அனுபவிக்கிற படியினாலே திரிகுணாத்மகமாயிருக்கும். அந்த மூன்று குணங்களும் நிரந்தரம் பரிணமத்தையடையும்போது ஒருங்காலொரு குணம் மேற் கொண்டிருக்கும்; மற்ற இரண்டு குணங்கள் உள்ளடங்கி யிருக்கும். ரசோதமோகுணங்கள் மேற்கொண்டிருக்கும்போது இராகத்துவேஷாதி அசுரசம்பத்துண்டாகும்; சத்துவகுணம் மேற்கொள்ளும்போது, பயமில்லாமை, சித்தசுத்தி, ஞானசாதனமான தியானம், நிஷ்டை முதலான தெய்வ சம்பத்துண்டாகும். இங்ஙனம் மனந் திரிகுணாத்மகமாகத் தோன்றினாலும் சத்துவகுணமே இதற்கு முக்கியமான உபாதான காரணம். இந்தச்சத்துவகுண மனதை அரூபமனதென்றும், ரசோதமோகுண மனதை உருவமனதென்றுங் கூறுவர். தியானப்பியாசத்தினாலே ரசசு, தமசு இரண்டு குணங்களையும் போக்கடிக்கும்போது சத்துவகுணமே மனதின் சொரூபமாக மிஞ்சும். அந்தச்சத்துவமனது சஞ்சலத்துக் கேதுவான ரசோகுணமில்லாததினால் ஏகாக்கிரமாயும், தூலபதார்த்தாகாரத்துக் கேதுவான தமோகுண மில்லாத படியால் சூக்குமமாயுமிருப்பதனால் அரூபத் தன்மையாய் ஆத்மதரிசனத்துக்கு யோக்கியமாயிருக்கும். ரசோதமோகுண ரூபமாயிருக்கிற மனது சஞ்சலமாயுந் தூலமாயுமிருப்பதால் உருவத்தன்மையாய் பந்தானுபவத்துக்கு யோக்கியமாயிருக்கும். இவ்விரண்டுகுணங் கெடுதலாகிய மனதினுருவநாசமே மனோநாசமா மென்க.

இவ்விதம் தத்துவ ஞானம், வாசனாக்ஷயம், மனோநாசம், நிர்ணயிக்கப்பட்டது. இனி, இந்தத் தத்துவ ஞானாதிகள் வருவதற்குச் சாதனத்தை விசாரிப்பாம்.

தத்துவ ஞானத்துக்குச் சிரவணாதிகள் சாதனம்; வாசனாக்ஷயத்துக்குப் பிரதிகூலவாசனையின் பழக்கம் சாதனம்; மனோநாசத்துக்குத் தியானஞ் சாதனம். சிரவணாதி, பிரதிகூலவாசனை, தியானமாகிய இவைகள் சித்தசுத்தி யுடையவனுக்கே உண்டாம். சித்தசுத்தியும் போகத்தில் ஆசை யொழிவதால் மட்டும் சித்திக்கும். எவனுக்குப் போகத்திலாசை நீங்கவில்லையோ, அவனுக்கு மேற்சொல்லிய மூன்றும் பிரயோஜனப்படா. இது பற்றியே,

"செறிவாஞான மனமாய்வு திரள்வாதனைமாய் விம்மூன்றும்
பிறிதாங்கார ணங்கடமைப பெறு சாதித்தற் கரிதாகும்.
நெறியாமதனல் விவேகிகளா விலேகூர்ப்புருட வருத்தத்தாற்
பொறியார்ப்போகமயறாப் போகவிலைதாய பொருந்துவதாம்"

என வாசிட்டத்தில்கூறியதுமா மென்க.

இச்செய்யுளில் சரியை யாதிகளை உடன் பாடாகக் கொண்ட கருத்தால் 'நெறியாமதனு,' லென்றும், அவைகளைத் திரமாய் அனுட்டிக்க வேண்டுமென்னுங் கருத்தால் 'விலேகூர் புருடவருத்தத்தா' லென்றும், அங்ஙனம் நிற்றல் சற்குருவன்றிக் கூடாதென்னுங் கருத்தால், 'விவேகிகளால்' என்றும கூறியவாறு காண்க. இக்கருத்துபபற்றியே,

"சரியை கிரியா யோகப்பதத்தின் முற்றிச் சாதனங்கள்
நிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும்" எனவும்,

"மீதாகியதன் பரிசயத்தால் வெளியா கினைவு போமளவு
மேதாகிலுமோர் தத்துவத்தி லிருகவேண்டும் பாவனையே"

எனவும் வாசிட்டத்திலும்;

"திகழுமுமா நாயகனுய்த் திடபோதத்தைத் தெரிவிக்கும் பரசிவனையாராதித்தப் பகவனருட் கருணையினுற் பாவமியாவும் பற்றறவே தீர்ந்துமனச் சுத்திபெற்றோ ரகிலசக தான்மாவா யருபமாகி யகண்டசிதா காயமதாய் நிறைந்துநின்ற சுகனமாம் பரசிவமே நாமென்றெண்ணிச்சோகமெலாம் தீர்ந்தடபரசிவமேயாகா"

என ரிபுகீதையிலும் கூறியதுமா மென்க. இன்னும் விரிக்கிற் பெருகுமாதலின் இங்ஙனம் நிறுத்தி இனிச்சித்தாந்தத்திலுள்ள சாதனததைப்பற்றி விசாரிப்பாம்.

சித்தாந்தத்தில் முத்தியடைவதற்குச் சாதனமியாதெனில், சரியை, கிரியை, யோகம், ஞானமென நான்காம். இவற்றுள் சரியையை தாதமார்க்க மென்றும், கிரியையைப் புத்திர மார்க்க மென்றும், யோகத்தைச் சகமார்க்கம் (தோழநெறி) என்றும் ஞானத்தைச் சன்மார்க்க மென்றுங் கூறுவர். இதன் விபரம் யாதெனில் சிவபிரான் கோவில் கொண்டருளுந் தேவாலயங்களில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருநந்தவனங்கள் வைத்தல, மலரால் மாலைகள் அமைத்துச் சாத்தல், சிவனடியார் பணிவிடைக் குற்றேவல் செய்தல் முதலாயின தாதமார்க்கமாகிய சரியை யென்றும்; வாசனையுடைய மலர்கள், தூபம், தீபம, திருமஞ்சனம், திருவமுது முதலிய பூசோபகரணங்களெல்லாந் தேடி அமைத்து, சுத்திபண்ணி சிவாசனமூர்த்தி மூலங்களாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை யெழுந்தருளச்செய்து மூர்த்திமானுகிய பரஞ்சோதியைப் பாவனை செய்து ஆவாகித்து, நிருமலமாகிய மெய்யன்பினுல் அருச்சனைசெய்து விருப்பத்தொடு துதித்து, வழிபாடியற்றி, நித்தியாக்கினி காரியமுஞ் செய்து முடிப்பது புத்திர மார்க்கமாகிய கிரியை யென்றும்; உசுவாசம், நிசுவாசம் இரண்டையும் அடக்கிச் சுழுமுனை மார்க்கத்திலே பிராணவாயுவைச் சலனமற நிறுத்தி, விடயங்களின் வழி மனத்தைச்செல்ல வொட்டாது மீட்டு மூலாதார முதலாகிய ஆறாதாரங்களையுமுணர்ந்து அவ்வாதாரங்களின் அரிய தேவதைகளைத் தியானித்து, அவ்வாறாதாரங்களிலும் அசபாசத்தி சிவான்மிலகயாய் நிற்குமுறைமையே நோக்கி விநாயகர் முதலாகிய தேவதைகளைப் பொருந்தி மேலாகிய பிரமரந்திரமளவும் அசபையுடன் சென்றணைந்து அப்பிரமரந்திரத்தின் கண்ணதாகிய தாமரை முகையை அலர்வித்துச் சந்திரமண்டலத்

தை மூலாக்கினியினுல் விளக்கப்பண்ணி அவ்வழித்தாக ஒழுகும் அமிர்தத்தைத் தேகமுழுவதும் நிரப்பிப் பூரணப் பிரகாசத்தைத் தியானித்தல் முதலியன சக மார்க்கமாகிய யோகமென்றும், எல்லாக் கலைஞானங்களும், புராணங்களும், வேதசிவாகமங்களிலுள்ள கருமகாண்டங்களும் மற்றச்சமய சாத்திரங்கள் பலவுமாராய்ந்து டல்வழிப்படுகின்ற பொருள் முழுவதும் கீழெனக்கண்டு கழித்து மேலாய பதி, பசு, பாசமென்னு முப்பொருளைய்த் தடத்த லக்கணத்தின் வைத்து, வகுத்து, உணர்த்தி, அம்மூன்றனுள் பதிப்பொருள் ஏனைப்பாச, பசுக்களுக்கு மேலாதல் இனிது விளங்கச் சொரூபலக்கணத்தின் வைத்துணர்த்துதலாகிய நல்வழிகளே தடைவல ஞானகாண்டத்தை ஓதல் கேட்டல்களுடன் சிந்தித்தப் புறத்தொழிலகத்தொழி லிரண்டுமின்றி அறிவுத் தொழின் மாத்திரையானே அம்மூவரு திருமேனிக்கு மேலாய, ஞாதுரு, ஞான, ஞேயமாகிய பகுப்பின்றி அத்துவிதமாய் இயைந்த அகண்டாகார நித்த வியாபகச் சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரான் மாட்டுச் செய்யும் வழிபாடு சன்மார்க்கமாகிய ஞானமெனறும் கூறுவர். இவற்றுள் சரியை, கிரியை யோகமென்னு மூன்றினுல் முறையே சாலோக, சாமீப, சாரூப மென்னும் பதமுத்தியும் ஞானத்தினுல் சாயுச்சியமாகிய பரமுத்தியுஞ் சித்திக்கும். ஞானம் வரவேண்டியதின் பொருட்டு சரியை, கிரியை, யோகங்களை முறையாய் அனுட்டிக்கவேண்டும். இதுபற்றியே,

"தானமியாகந்தீர்த்த மாச்சிரமந்தவங்கள் சாந்திவிரதங்கன்ம யோகங்கள்சரித்தோ
ரீனமிலாசுவர்க்கம்பெற்றிமைப்பளவின்மீள்வர்சரியையோகக்கிரியாசரிகையினினின்றோ
ருனமிலாமுத்திபதம் பெற்றுலகமெல்லா மொடுங்கும்போதரன்மூனிலா தொழியினுற்ப [வித்து
ஞானநெறியடைந்தடைவர் சிவனையங்கு நாதனேமுன்னித்தினணுகுவர்நற்றவரே"

எனச் சிவஞானசித்தியிற் கூறியவாறு காண்க.

இந்த ஞானமும் பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானமென முத்திறப்பட்டு விளங்கும்.

(இன்னும் வரும்)

பொ. மு. முத்தையபிள்ளை.

---

"நானும் உழுது விதைக்கிறேன். என்னுடைய உழவிலும் விதைப்பிலும் இருந்து நித்திய பயனை அறுக்கிறேன். என்னுடைய வயல் சமயம்; நான்பிடுங்கும் களைகள் காமாதிகள்; எனது கலப்பை ஞானம்; நான் விதைக்கும் வித்து பரிசுத்தம்" என்று வயலில் வேலைசெய்து கொண்டிருந்த கிருஷிக்காரன் பக்கத்தில் நின்று புத்தர் சொன்னார்.

—Hardy's Manual.

***

ஒருவன் எண்ணம் எப்படியோ, அப்படியே அவன் நிச்சயம்; அவன் நிச்சயம் எப்படியோ, அப்படியே அவன் கர்மம்; அவன் கர்மம் எப்படியோ, அப்படியே அவன் அனுபவம் ...... ஆனால் எவன் இச்சிக்கவில்லையோ, எவனுக்கு யாதொரு இச்சையுமில்லையோ, எவன் இச்சைகளுக் கெல்லா மப்பாலிருக்கிறானோ, எவனுடைய இச்சைகளெல்லாம் பூர்த்தியாய் அடையப்பட்டவையோ, எவனுடைய ஆசைக்குரிய பொருள் ஆத்மாவாயிருக்கின்றதோ அவனுடைய இந்திரியங்கள் (மரணகாலத்தில் மறுஜன்மத்திற்காகவோ, ஆவிவாழ்க்கைக்காகவோ) பிரிகிறதில்லை. பிரம்மமாகவே யிருப்பதால் அவன் பிரம்மத்தையே அடைகிறான்.

—Brihadaranyaka Upanishad.

(2)

# SREE RAMAKRISHNA'S TEACHINGS.
# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசமொழிகள்.

ஞானியையும் தெய்வத்தையும் வெறுங் கையோடு சென்று பார்க்கலாகாது. உலகத்திற் பெரியோராகிய இவர்கள்முன்வைப்பதற்கு எவ்வளவு அற்பமான காணிக்கையேனும் யாதாமொன்றை உங்களோடு கொண்டுபோங்கள்.

***

[illegible] குதிரை அதன் கண்கள் முகப்பட்டியினால் மறைக்கப்பட்டாலொழிய நேரே செல்லுகிறதில்லை. அதுபோலவே உலகத்தைப் பற்றும் மனிதனுடைய மனதும் அங்கும் இங்கும் பாராதபடி விவேகம், வைராக்கியம், என்னும் கண்மூடிகளால் மூடப்படல்வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் அது ஒருபோதும் கெட்டவழிகளிற் போகவே மாட்டாது.

***

வினா:— உலகப்பற்றுடைய மாந்தர் ஏன் எல்லாவற்றையும் துறந்து கடவுளைப் பின் பற்றுகிறார்களில்லை?

விடை:— வேஷக்காரன் அபிநய சாலையில் வந்தவுடன் வேஷத்தையெல்லாம் எறிந்துவிடக் கூடுமோ? எல்லாரும் அவரவருடைய வேஷத்திற்குத் தக்கபடி ஆடித்தீர்க்கட்டும். காலம் வரும்போது அவரெல்லாரும் தத்தம் வேஷத்தை எறிந்து விடுவார்கள்.

***

உலக சம்பந்தத்தோடேயே வாழ்ந்தும் முத்தியடைந்தவராக ஜனக மஹாராஜனை மாந்தர் அடிக்கடி புகல்வதுண்டு. ஆனால் இதுவரையுள்ள சரித்திரங்களுள் இஃதோர் உதாரணமே காணப்படுகின்றது. அவருடைய விஷயம் விலக்கேதவிர சாதாரணமாயுள்ளதல்ல. ஆயின் சாதாரண விதியோ, காமத்தையும் இச்சையையும் ஒழித்தாலொழிய எவனும் முத்தியடைதல் அசாத்தியம் என்பதே. உங்களை ஜனகராஜனாக எண்ணிக் கொள்ளாதேயுங்கள். எத்தனையோ நூற்றாண்டுகளாகியும் மற்றொரு ஜனகனை இவ்வுலகம் அளிக்கவில்லை.

***

ஒரு வேலைக்காரி தன் எஜமானுடைய வீட்டைக்குறித்து 'இது எங்களுடைய வீடு' என்று சொல்லுகிறாள். அப்படிச்சொல்லும் பொழுதெல்லாம் அது தன்னுடைய வீடல்லவென்றும் தன்னுடையது பர்த்வான் (Burd wan) அல்லது நுடியா (Nuddea) என்னும் [illegible] ஒரு கிராமத்திலிருக்கிறதென்றும் அவள் அறிவள். அவள் எண்ணங்களெல்லாம் தன்னுடைய சொந்த கிராமத்திலுள்ள வீட்டையே நாடுகின்றன. திரும்பவும் தன்னுடைய கையிலிருக்கும் குழந்தையைக் குறித்து 'என் (குழந்தையின் பெயர்) ஹரி மிகவும் துஷ்டனாயிருக்கிறான்' அல்லது 'என் ஹரி இதை அல்லது அதைத் தின்ன விரும்புகிறான்' என்று சொல்லுகிறாள். அப்படிச் சொல்லும் பொழுதெல்லாமும் ஹரி தன்னுடைய குழந்தையல்லவென்பது அவளுக்குத் தெரியும். இவ்வேலைக்காரியைப்போல பற்றற்ற வாழ்க்கையை நடத்

த என்னிடத்தில் வருபவர்களுக்கெல்லாம் நான் உபதேசிக்கிறேன். இவ்வுலகத்திற் பற்றில்லாமல் வாழும்படி சொல்லுகிறேன். அதாவது உலகத்திலிருந்தும் இல்லாமல் இருக்கச் சொல்லுகிறேன். அதே காலத்தில் அவர்களுடைய மனம் எல்லாரும் உற்பவித்து வந்த வீடாகிய கடவுளை நாடச்சொல்லுகிறேன். அவர்களைப் பக்திக்குப் பிரார்த்திக்கச் சொல்லுகிறேன்.

***

உலகத்தைப் பற்றியிருந்தால் மனிதன் வேறென்ன செய்யவேண்டும்? ஓர் காலத்தில் குமாஸ்தா ஒருவன் ஜெயிலில் போடப்பட்டான். குறித்த காலம் கழிந்த பிறகு ஜெயிலிலிருந்து வெளியே வந்தான். நல்லது, அவன் என்ன செய்யவேண்டும்? விடுதலையாய் வெளியே வந்ததற்காக சந்தோஷத்திற் கூத்தாடவேண்டுமா அல்லது பழைய வேலையை ஒப்புக்கொண்டு பார்க்கவேண்டுமா? பயனை ஈச்வரார்ப்பணம் செய்துவிட்டு உங்கள் வேலையை முன்போல பார்த்து வாருங்கள்.

***

அலையடித்துக் கொண்டிருக்கும் ஏரியில் சந்திரனுடைய பிரதிபிம்பம் அரைகுறையாகத் தோன்றுதல் போல் மாயையாற் பிடிக்கப்பட்டு உலகப்பற்றுடைய மனிதன் சஞ்சல மனதில் கடவுளுடைய பிரதிபிம்பமும் அரைகுறையாகவே தோன்றுகிறது.

***

மூக்கில் ஒரு மீனைக் கொத்திக்கொண்டு ஒரு பருந்து ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தது. வேறு பல பருந்துகளும் காக்கைகளும் வரிசை வரிசையாய் அதைப்பின் தொடர்ந்து உபத்திரவப்படுத்தின. அது தன்னுடைய இரையோடு தப்பிப் போவதற்காகத் திடீரெனக் கீழே இறங்கியும், மேலே பறந்தும், ஒரு திசையை நோக்கி வேகமாய்ப் பாய்ந்தும், திடீரென அதன் எதிர்த்திசையை நோக்கி ஓடியும் இங்ஙனம் பலவழிகளிற் பார்த்தும் பயன்படாமற் போயிற்று. கடைசியாக மிகவும் களைப்போடும் வெறுப்போடும் அது மீனை நழுவ விட்டுவிட அதை (மீனை) மற்றொரு பருந்து பிடித்துக்கொண்டது. உடனே மற்ற பருந்துகளெல்லாம் மீனைக் கொண்டுபோகிற பருந்தைப் பின்தொடர்ந்து செல்ல இப்பருந்திற்கு உபத்திரவம் நீங்கிற்று. மெதுவே ஒரு மரத்தின் கிளையில் இறங்கிக் களைப்பாறிற்று. அப்பொழுது அவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவதூதர் ஒருவர் அம்மரத்திற் சாந்தமாய் வீற்றிருக்கும் பருந்தைப்பார்த்து வணங்கிச் சொன்னதாவது:—"யாவனொருவன் சகல பற்றுக்களையும், மோகங்களையும், பாரங்களையும் உதறிவிட்டு, விடுதலையடைகிறானோ அவன் ஆஹா! எவ்வளவு சாந்தமும் சுகமும் அடைகிறான்! அப்படிச் செய்யாவிட்டால் எவ்வளவு ஆபத்து!"

***

வளர்ப்புக் கிளிக்கு வீடு சுவரின் மேலிருக்கும். கயிற்றின் ஒரு நுனி அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும். மற்ற நுனியில் ஏதேனும் பளுவான வஸ்து ஒன்று கட்டித்தொங்கப் பட்டிருக்கும். அது தரையிற்கிடக்க, கிளி முற்றத்தில் அங்குமிங்கும் ஓடி விளையாடும்; அதற்கு எதிலாவது பயம் நேரிட்டால் அது உடனே ஓடி சுவரின் மேலிருக்கும் தன் வீட்டில் ஒளிந்துகொள்ளும். ஆனால் அதன் கழுத்திற் கட்டப்பட்டிருக்கும் கயிற்றின் மற்றொரு நுனியிலுள்ள கனம் கீழேயிழுப்பதால் அது அவ்விடத்தில் அதிக நேரம் தாமதிக்க முடியாது. அது போலவே ஒரு

மனிதனுடைய வீடு சர்வவல்லமையுள்ள கடவுளுடைய பாதார விந்தங்களாயிருக்கின்றது. துரதிர்ஷ்டத்திலும் கெட்டகாலத்திலும் அவனுக்குப் பயம் நேரிடும் பொழுதெல்லாம் தனது உண்மையான வீடாகிய கடவுளிடத்திற் போகிறான்; ஆனால் உலக விஷயங்களிழுப்பதால் அவன் சிறிது நேரத்தில் கீழே யிறங்கும்படி நேரிடுகிறது.

***

தராசின் பளுவான தட்டுக் கீழே யிறங்க, இலேசான தட்டு மேலே செல்கின்றது. அது போலவே உலகசம்பந்தமான கவலைகள் அதிகமுடையவன் அதிலேயே தாழ்ந்துபோக அவ்வித கவலைகள் குறைந்தவன் பரமபதத்தை நோக்கி மேலே செல்கிறான்.—Awakened India.

# THE EXPOSITION OF KNOWLEDGE.

## அறிவு விளக்கம்.

(162-ம் பக்கத்தொடர்ச்சி)

பழமைக்கிரங்கி:—சகோதரா!

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை"

எனும் ஔவையார் வாக்கியப்படி நற்குணமுள்ள வுடற்பிறந்தவனில்லாச் சரீரம் இருந்தென்ன விறந்தென்ன? முன்கூறிய பகிரங்கபக்தியின் சரிதையைக் கேட்க உண்டான வானந்தத்திற்களவில்லை. இனி அந்தரங்க பக்தியைக் குறித்து ஏதாவது சரிதையுண்டேல் தெரிவிக்க வேண்டுகிறேன்.

உண்மை விரும்பி:—அண்ணா!

"உள்ளமறிவா யுழைப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே"
"உற்றுற்றுக் கோடி யுளமருண்ட பாவியைநீ
சற்றிரங்கி யாளத் தகாதோ பராபரமே"

எனும் தாயுமான சுவாமிகள் வாக்கியங்களையும்,

"உள்ளன்பி லாதபேர் நித்திக்க வேபேசி
யுறவாடு முறவு முறவோ"

எனும் திருவேங்கட சதகத்தின் கருத்தையும்,

"பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கி
னல்லறிவு சற்றே நகும்"

எனும் ஔவைக் குறளின் கருத்தையும், யோசித்துப்பார்க்கில் அவ்வுள்ளன்பின் பெருமையையும், அவ்வன்பினாலே பேறுபெற்றவர்கள் தன்மையையும் எடுத்துரைக்க வேட்டங்கொள்ளாது. ஆசையால் அவ்வுள்ளன்பினுற் புகழடைந்த வொருவ

லைப் பற்றிச்சுருக்கமான உபந்நியாசம் ஒன்று புகல்கின்றனன்; அதைச் செவிக்கேற்பாயாக. கதைவருமாறு:—ஞான ரூபியான வியாசருக்கு சத்வகுண சொரூபியாகிய விதுரனும், ரஜோகுண சொரூபியாகிய பாண்டுவும், தமோகுண சொரூபியாகிய திருதராஷ்டிரனும் புத்திரர்களாகத் தோன்றினர். அம்மூவரில் பாண்டுவினிடத்தில் பஞ்சபூதவடிவினராகிய, தருமன், பீமன், அருச்சுனன, நகுலன், சஹாதேவன், என்ற ஐந்துபுத்திரர் தோன்றினர். இப்பஞ்ச பாண்டவர்களுக்குச் சகாயரும் அருச்சுனனுக்கு மைத்துனருமாகிய ஆன்மரூபியான ஸ்ரீகிருஷ்ணர் பொத்தற் சரீரமாகிய துவாரகையில் வசித்து வந்தார். இப்படியிருக்க ஒருநாள் அருச்சுனனும் கிருஷ்ணரும் சந்தோஷவார்த்தை யாடுகையில், அருச்சுனன் கிருஷ்ணனைப்பார்த்து "ஐயா! மைத்துனரே! என் தமையனாராகிய பீமர் தினே தினே ஸ்நானஞ்செய்யாமல் அசுசியுடையவராயும், ஜீவஹிம்சை செய்பவராயும், பெருந்திண்டி யுடையவராயும், நியமநிஷ்டை யில்லாதவராயுமிருக்கிறாரே! இது என்ன காரணம் தெரிவிக்கவேணும்" என்றான். இஃதைச்செவியேற்ற கிருஷ்ணர் புன்னகைசெய்து "கின்சுபாவமியா" தெனவினவினர்.

"தன்பெருமை சொல்லியே தன்னைப்புகழ்ந்தபதர்"

எனும் திருவேங்கட சதகத்தின் கருத்தையும்,

"தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றும்"

எனும் நீதிமஞ்சரியின் கருத்தையும் அறியாத அருச்சுனன் தான் ஈஸ்வரபக்தியிற் சிறந்தவனென்றும், பீமர் தனக்குச் சமானராகா ரென்றும் பெருமை கூறினன். சின்னாட் சென்றபிறகு ஸ்ரீகிருஷ்ணர் அருச்சுனனைப்பார்த்து "அருச்சுனா! நாமிருவரும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த மெனும் பஞ்ச லட்சண சொரூபியாகிய பரமசிவம் வசிக்கும் கேவலஸ்தானமாகிய கைலயகிரிக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ்செய்து வருவோம் வா" வென்று கூப்பிட்டார். அதற்கு விஜயன் சம்மதிக்க, இருவரும் புறப்பட்டுக் கைலைமலைக்குச் சென்றனர். பரமசிவத்தின் மூலஸ்தான தரிசனம் செய்வதற்காக இருவரும் கோயிற்குட் புகுந்தார்கள். எதிரில் அளவிடக் கூடாத பூதகணங்கள் கூடை கூடையாய்ப் புஷ்பங்கள் வாரி எடுத்துச் சென்று கோயிற்கு வெளிப்புறத்தில் கொட்டுவதைக் கண்டார்கள். அப்பொழுது சகலமும் அறிந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் அறியாதவர்போல் நடித்து, அருச்சுனனை நோக்கி "அருச்சுனா! அப்பூதகணங்கள் செய்கிற காரியமென்ன வென்று விசாரித்துவா" என்றார். அவர் உத்திரவின்படி அருச்சுனன் அப்பூதகணங்களிடம் சென்று "நீவிர் செய்யுஞ் செயல்யாதென" வினவினான். அதைச் செவியேற்ற பூதகணங்கள் விஜயனை நோக்கி, "அப்பா! பூலோகவாசியே! நீ கேட்டதற்கு நாங்கள் சுலபமாய் விடையளிக்கப் பாத்திரர்களல்லர். ஏனெனில்நாங்கள் சிவனிடமே யிருக்கிறோ மென்றும், எங்களுக்கு மோக்ஷமுண்டே யல்லது இதர தேவமனுஷியர் முதலானவர்க்கு மோக்ஷமில்லை யென்றும், மமதைகொண்டிருந்தோம்; ஆனால் இப்பொழுது,

"தண்டாமரையி னுடன்பிறந்தே தண்டேனுகரா மண்டூகம்
வண்டேகானத் திடையிருந்து வந்தேகமல மதுவுண்ணும்
பண்டேபழகி யிருந்தாலும் மறியார்புல்லோர் நல்லோரை
கண்டேகளித்தங் குறவாடித் தம்மிற்கலப்பார் கற்றோரே"

எனும் விவேகசிந்தாமணியின் கருத்துப்படி நாங்கள் தவஜோக்குச் சமயைகபா ஞேம் ''என்றனர். உடனே தனஞ்சயன் அப்பூதகணங்களை நோக்கி ''நீவிர் கேட்ட வுணாயில் புஷ்பங்கள் யாரால் அர்ச்சிக்கப்பட்டு எங்கிருந்து விழுகின்றன சொல்லுமின்'' என்றனன். வெகு சிரத்தையோடு கேட்கிறவர்களுக்குச் சொல்லாத ஆசிரியன்

''தாமேதரக்கொளி னன்றித் தின்பான மேலிக்கொளக்
கொடாவிடத்தது மடற்பனை''

எனுங் கூற்றமுடையவனுதலால் யாங்கள் கேள்வியுற்ற வகையில் சொல்லுகி றோமென்று சொல்லத் தொடங்கினர். பூலோகத்தில் அஸ்தினபுரியெனும் பட்ட ணத்தில் சந்திரகுலதிலகரான பஞ்சபாண்டவர்களுக்குச் சோதரரும், வைகுண்டவாசரா கிய ஸ்ரீ கிருஷ்ணரது மைத்துனரு மாகிய தனஞ்சயனுக்குத் தமயனாரான பீமர் மானஸ பக்தியிற் சிறந்தவர். அவர் சிரத்தையோடு கூடிய மனதால் சிவ ரூபத்தை உருவகப் படுத்தி, அன்பாகிய நீரால் அபிஷேகித்து, அதி நயமலராகிய புஷ்பங்களால் இடை விடாது கைலாயபதியின் சிரசில் புஷ்பமாரி வருஷிக்கிறார். அப்புஷ்பங்களை வாரிவெ ளியே கொட்டும்படி நந்திதேவர் எங்களுக்கு ஆக்ஞாபித்தார். நற்கதியடைவோமெ னும் துணிவினால் அப்பணியேற்று நாங்கள் இப்படி வாரிக்கொட்டுகிறோம்'' என்றனர்.

இஃதைப் பற்குனன் ஸ்ரீகிருஷ்ண மூர்த்திக்கு அறிவித்தான். கிருஷ்ணர் புன் னகை கொண்டு, ''மைத்துனா! விளங்கிற்றா! விளங்கிற்று.'' என்றார். பின்னும் கிருஷ் ணர் அருச்சுனனைப் பார்த்து ''மைத்துனா! ஓரோர் சமயத்தில் பாஹிர் வேஷம் காட் டும் நீ உள்ளன்பிலாமல் காக்கைபோல் நீரில் ஸ்நானம் செய்தும், கொக்கிறகுபோல் விபூதிதரித்தும், மாரிகாலத்திற் கூவும் தவளைப்போல் இடைவிடாது சாஸ்திரமயிக் குகதறியும், ருத்திராக்ஷப்பூனைபோல் கண்மூடி ஜபித்தும், தாசிகள் போல காவியார்த் தமாய்த் தவஞ்செய்து நீ அஸ்திரங்கள் பெற்றும் பயன் யாதுளது. ஆகையால் மைத்து னா! இனி, பீமனைப்புழிக்காமல் மரியாதை செய்வாயாக'' என்று அறிவுறுத்தினர். பின் னர் இருவரும் அஸ்தினபுரம் வந்துசேர்ந்தார்கள்.

பழமைக்கிரங்கியபேர்! அத்தரங்க பக்தியின் மகிமையை அறிந்தீரா?

''காராரு மாணவக் காட்டைடக் களைந்தறக்
கண்டகல் காரமென்னுக
கல்லைப்பிளந்து நெஞ்சகமான பூமிவெளி
காணத்திருத்தி மேன்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்மோ மாயைவன்
பறவையணு காதவண்ணை
நேராக நின்று விளைபோகம் புசித்துண்ட
கின்னபர் கூட்ட மெய்த
நிலைவின்படிக்குநீ முன்னின்று காப்பாதே
நின்னருட் பாரமென்று
மாராலுமறியாத ஞானவெளியில் வெளி
யாகின்ற துரியமயமே
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே''

என்று தாயுமானசுவாமிகள் கூறியிருத்தலினாலும்,

"இருக்குநாலு வேதமு மெழுத்தறவே யோதினும்
பெருக்கநீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான்"

என்று சிவவாக்கியர் கூறியிருத்தலினாலும் இப்பக்தி முன்னர் கூறியதிலும் அதிக மேன்மையுடைத்தெனத் தெரிந்து கொள்வாயாக.

(இன்னும் வரும்.)

ப. ஜயராமபிள்ளை.

---

# THE SAIVA SIDDHANTHAM.

## சைவசித்தாந்தம்

## பதிபசுபாசத்தொகை

[தொடர்ச்சி]

—:o:—

### நான்காவது அநுக்கிரகவியல்.

நான்றையானே அநுக்கிரகவியல் கூறுகின்றார்

பரிபாக மாகவிருட் பாசமுடை யூனை
யருவருக்கு மாவிவிருப் பற்று.

இது பக்குவம் வருவதற்கு நிகழுங்குறி யுணர்த்துகின்றது.

(இ—ள்) ஆவி = ஆன்மாவானது; பரிபாகமாக = ஈசனது திரோதான சத்தியால் பக்குவம் எய்துதற்கு முற்குறியாய்; இருட்பாசமுடை ஊனை = அஞ்ஞானத்தை விளைக்கும் ஆணவமலத்தா லியைந்த அவ்வசுத்த தேகத்தின் கண்ணுள்ள, விருப்பற்று = அபிமானத்தின் கண்ணின் றுநீங்கி, அருவருக்கும் = அதனைவெறுக்கும் (எ-று)

தண்டு மலபரிபாக மெய்துதலே பக்குவம்; மலம் = ஆணவமலம்; பரிபாகம் = பசர்க்கம்; பாசம் = பக்குவம்; அதாவது ஆணவமலம், பக்குவம் எய்துதல். பக்குவமெய்துதலாவது, அது தன் மறைத்தற்சத்தியிற் குன்றிநின்று மற்றோர் பிறவிக்கு ஏதுவாதலின்றி இருத்தலாம். செம்பை ரச குளிகை பரிசித்தவாறு அதனோடு சம்பந்தமுற்ற களிம்பின்றன்மை மாறிப் பொன்னுருப் பெற்றாற் போல, உயிர் மெஞ்ஞானம் பெற்றவழி அதனோடு சகசமாய் நின்ற ஆணவமலசத்தி குன்றி சிவமாந்தன்மை எய்தும். காணுஞ்சத்தியுள்ள கண்ணுக்கே சூரியப்பிரகாசம் பயனுறுமாப் போல், அருட்கண் பெற்றவர்க்கே ஈசன் அறிவிக்கறிவாய் நின்று உபகரிக்கும் உண்மை நிலை விளங்கும். உமி நீங்கிய நெல் முளையாத வாறுபோல, ஆணவமலம் நீங்கிய இவ்வான்மா மீண்டும் பிறத்தற் றொழிலைப் பொருந்தாது. ஆனால் பேரானந்த நிலையாகிய சிவாநுபவமொன்றனையே சுகாதாரமுடையதாய் அமையும். (1)

"அப்பொழுது தேசிகனை யாவேசித் தேயமல
னப்பழுதை நீக்குமரு ளால்

(இ—ள்) அப்பொழுது = மலபரிபாகம் வந்தவாறே; அமலன் = நின்மலனாகிய இறைவன்; தேசிகனை ஆவேசித்து = குருவை அதிட்டித்து நின்று; அருளால் = தனது அருட்சத்தியால்; அப்பழுதை நீக்கும் = பிறவித்துன்பத்தை ஒழிக்கும். (எ-று)

பதிபுண்ணிய விசேடத்தால் இருவினையொப்பு வந்து சத்திநிபாதம் பிறந்தவாறே, இறைவனும் மானைக்காட்டி, மானை பிடித்தாற்போல, மானிட உருவங்கொண்டு, ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளிவந்து பக்குவம் நோக்கித் தீட்சாவிதங்களிலொன்றாற் தீக்ஷித்து, சஞ்சிதத்தைக் கெடுத்து, ஆகமியம் ஏறாதபடி காட்டி தேகத்தோடே பிராரத்துவ வினையையும் போக்கி அத்துவித நிலையிற்பொருத்துவன். இத்தேசிகன் திருவருளின்றி அடிசேர்ஞானமாகிய மெஞ்ஞானம் எவ்வாற்றானும் வந்துறாமையைக் கண்டுணர்க.

தீக்ஷை யென்பது மும்மலத்தை வீட்டி முத்தியை விளைவித்தற்குரிய சிவஞானத்தைப் பயப்பிப்பதாம். மலபரிபாகம் பலவகைப்படுதலின் தீக்ஷையும் பலவகைப்படும்; அவையாவன சட்சு தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானத தீட்சை, சாஸ்திர தீட்சை, யோக தீட்சை, ஒளத்திரி தீட்சை, என்பவைகளே.
இதன் பரப்பையெல்லாங் குருமுகமாய்க் கேட்டுணர்க. (2)

நீங்கவிரு ணீங்காதே நின்றசிவங் கண்டாவி
யோங்கியபே ரின்பத் துறும்.

இது ஆணவமலம் நீங்கியவாறே ஆன்மா எய்துநிலையுணர்த்துகின்றது.

(இ—ள்) இருள் நீங்க=ஆணவமலமறைப்பினா லுண்டான அஞ்ஞான நீங்க; நீங்காதே நின்றசிவம்=தனக்குத்தோன்றாத் துணையாய் பெத்த முத்திகளினும் வியாபித்து நிற்கும் இறைவனை; ஆவிகண்டு=ஆன்மாவானவன் தன்னுளனே அகண்டாகாரப் பேரொளியாய்க் கண்டு; ஓங்கிய பேரின்பத்துறும்=பரமானந்த சாகரத்தின்கண் பொருந்தி யின்பமனுபவிக்கும். (எ-று)

அநாதி சையோகமாகிய ஆணவமலத்தின் வாதனையுங் கெட்டு நிற்றலே ஈண்டு இருள் நீக்கலாம். ஈசன் பெத்த முத்திகளினும் தோன்றாத் துணையாய் நிற்போனாதலால் "நீங்காதே நின்ற சிவம்" என்றுகூறினார்; சிவ போகத்துக்குமேலொரு ஆனந்த மின்மையால் "ஓங்கிய பேரின்ப மென" விசேடித்தார். மற்றைய பதமுத்திகளெல்லாம் மேல்நோக்கிப் பார்க்குங்கால் ஒன்றற்கொன்று குறைந்தவைகளேயாம்.

பேரின்பத்தின்கண் உறுதலாவது—தாடலை (தான் + தலை) போலாகு அத்துவித நிலையின்கண் அடங்கி நின்று இன்பமே சொரூபமாகிய சிவபோகத்தில் சுவானுபவம் எய்தி நிற்றலாம். (3)

அநுக்கிரகவியல் முற்றிற்று.

ஆகச்செய்யுள்—22.

ஆக்கைசிறை யென்றமலத் தாதரவுற் றோர்க்கிந்த
வாக்கை யறைக மதித்து.

இந்நூலை யுற்றற்குரிய அதிகாரி இவனெனத் தெரிக்கின்றார்.

(இ—ள்) ஆக்கைசிறையென்று=சப்ததாதுக்களால் இணைக்கப்பெற்ற இத்தேகம் ஓர்காராக்கிரகமென்றெண்ணி வெறுத்து; அமலத்து=நின்மலத்துவத்தின்கண்; ஆதரவுற்றோர்க்கு=விருப்பமுடையவர்களுக்கு, இந்தவாக்கை=பதிபசுபாசத் தொகையென்னும் இந்த ஞானசாத்திரத்தை, அறைக=சொல்லக்கடவர்கள்.

பக்குவியல்லார்க்கு இதனை உரைத்தல் விழலுக்கிறைத்த நீர்போல, யாதொரு பயனும் பயப்பியாது இடர்ப்பாட்டின்கண் வீழ்த்து மாதலால் ஈண்டு இவ்வாறு கூறுவாராயினர். (23)

"விடம்பர்க் குரைத்தார் விழுவர்கீழ் மேலே
யடைந்தார்நல் லார்க்கறிவித் தார்"

இது பக்குவர், பக்குவரல்லாதாராகிய இருவர்களுக்கும் அறிவித்தார் எய்தும் பயன் கூறுகின்றது.

(இ—ள்) விடம்பர்க்கு = நற்சனர்களாகிய அபக்குவிகளுக்கு; உரைத்தார் = சொல்லிய ஆசிரியர்; கீழ்விழுவர் = நரகத்தின்கண்வீழ்ந்து அழுந்துவர்கள்; நல்லார்க்கு = பக்குவமுடையவர்களுக்கு, அறிவித்தார் = சொல்லியருளிய ஆசிரியர், மேலடைந்தார் = சிவலோகத்தை யடைந்தவராவர். (எ—று)

ஆதலால் ஆசிரியராவார், அபக்குவர்களை, தம்மிடத்து அன்பும், அவர்களிடத்து அருளுங்கொண்டு தள்ளல் வேண்டும். இன்றேல் இவ்விருவரும் நரகில் வீழ்ந்து அழுந்துவர்கள்; அதினின்றும் ஏறல் முடியாதென்று உண்மை நூல்கள் கூறுகின்றன. (௨௪)

"இந்தவிய லைத்திரிவு மின்றியுணர்ந் தார்க்கிருண்ட
பந்தமறும் வாய்த்துறுமின் பம்"

இது இந்நூலுணர்ந்தார் அடையும் பலன் கூறுகின்றது.

(இ—ள்) இந்தவியலை = ஞானத்தைக் கூறும் இந்தப்பகுதியை; திரிவுமின்றி = பொருள் வேறுபாடின்றி; உணர்ந்தார்க்கு = நன்குய் அறிந்த சாதுக்களுக்கு, இருண்ட பந்தமறும் = அநாதியே தமமைப் பொருந்திய அஞ்ஞானமாகிய பாசப்பிணிப்பு நீங்கும்; இன்பம் வாய்த்துறும் = பேரானந்த அநுபவங்கிட்டும். (எ—று)

திரிவுமென்ற உம்மையால் சந்தேகமும், அறியாமையுங் கொள்ளப்படும். இவை மூன்றும் முத்திவிக்கினங்களென்று கூறப்பெறும்.

இயல், ஒத்து, பகுதி, என்பன ஒருபொருட் சொற்கள். சுபம். (௨௫)

ஆகச்செய்யுள் (௨௫)

பதிபசு பாசத்தொகை முற்றிற்று.

---

மெய்கண்ட தேவன் றிருவடிவாழ்க.

எஸ். பால்வண்ணமுதலியார்.

---

பயமற்ற யுத்தவீரன் அவன் சரீரத்திற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தபோதிலும் சிறிதும் பின் வாங்காது எதிரியை எதிர்த்துத் தோற்கடிப்பான். ஹே! துன்பத்தில் வருந்தும் ஜனங்களே! அவனைப்போற்செய்யுங்கள் ஆத்மாவாகிற அரணிலிருந்துகொண்டு காமம், கோபம், துவேஷமுதலிய பகைவர்களை முறியடித்தோட்டுங்கள். தோல்வியடைந்திருந்தபோதிலும் தைரியமாய் எதிருங்கள்.

—Universal Brotherhood-Path.

***

ஏதேனும் ஒன்றைச் செய்வதற்குப பார்க்கிலும் சும்மாவிருத்தற்கு அளவில்லாத பலம் வேண்டிய காலங்களிருக்கின்றன. சாந்தம் அதிக சக்தியை உடைத்தாயிருப்பதின் பயனையிருக்கின்றது—Channing.

# HISTORY OF JATA BHARATHA.

## ஜடபரதர்சரித்திரம்.

(213-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதைக் கேட்ட முனிவர் அரசனை நோக்கி "வாராய் ராஜாவே! நீ வேதங்களின் விவகாரத்தை சத்தியமாக நினைக்கின்றனை. ஆகையால் நீ தத்துவத்தை யறிந்தவனன்று. எந்தப் புருஷன் இவ்வுலக விஷயங்களை நித்தியமெனக் கொண்டு அவற்றினிடத்தில் வெறுப்படைகின்றானில்லையோ, அந்தப் புருஷனுக்கு வேதங்கள் தத்துவ ஞானத்தைப் போதிப்பதில்லை. அவனுடைய மனம் சாத்வீக இராஜச தாமசகுணங்களினால் வசீகரிக்கப்பட்டதாய் எப்போதும் புண்ணிய பாபங்களைச் செய்து கொண்டிருக்கின்றது. கர்மவாசனையுடன் கூடினதாயும், சப்தாதி விஷயங்களில் ஆசக்தியுடையதாயும், காமாதி விகாரங்களை யுடையதாயும், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், பூதமாத்திரைகள் இவற்றினின் சிரேஷ்டமானதாயுமிருக்கிற மனமானது பலபல ஜன்மங்களுடன் தேவதிரியகாதி சரீரங்களைத் தரித்துக்கொண்டு அந்தச் சரீரங்களினாலே உத்கிருஷ்ட நிகிருஷ்டத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணுகின்றது. அம்மனமே ஜாக்கிரப் பிரபஞ்ச ரூபமாயும் சொப்பனப்பிரபஞ்ச ரூபமாயும் நானாவிதமான விகாரத்திற் சேர்வதாயுமிருக்கின்றது. இவ்வகைமனமானது சம்சாரத்திற்கே ஏதுவாயிருத்தல் சப்தாதி குணங்களை யடையுமளவேயாம். அவ்வகை யடையாதிருப்பின் பேதத்தோற்றங்களை நீங்கினதாகி சொரூப நிஷ்டையைப் பொருந்துகின்றது. ஆதலால் மனதை அபிமான ரூபமான சம்சார ஏதுவாயும் அபிமான சூன்ய ரூபமான மோக்ஷ ஏதுவாயுங் கூறுவர். ஜீவனானவன் ஜாக்கிர சொப்பனங்களில் பிரகாசிக்கின்ற அதன் விர்த்திகளையும் சுழுப்தி அவஸ்தையில் அதன் விர்த்திகள் பிரகாசியாதிருப்பதையும் பார்க்கிறான். மனம் நிர்விகாரமாயிருந்தாலும் அதனிடத்தில் ஜகத்காரணமாயும், பரிபூரணமாயும், ஸ்வயம் பிரகாசமாயும், ஜன்மாதி ரஹிதமாயும் விளங்காநின்ற ஆத்மாவானது பிரகாசிக்கின்றது.

"ஹே! ராஜாவே! புருஷனானவன் விஷயசங்கத்தைவிட்டுக் காமக்குரோதாதிகளை ஜெயித்தவனாய் ஞானோதயத்தினாலே மாயையை உதறிப்போட்டுப் பரமார்த்தத்துவத்தைப் பாராமல் எம்மட்டிலிருக்கிறானோ, அம்மட்டும் இந்தச் சம்சாரத்தில் பிரமித்துக்கொண்டிருக்கிறான். ஜீவனுக்கு உபாதியாயிருக்கும் மனமே சம்சார பந்தங்களுக்கு உற்பத்திஸ்தானமாக எம்மட்டும் சத்தியமாயிருக்கிறதோ, அம்மட்டும் புருஷன் சம்சாரத்தில் பிரமிக்கிறான். சோகம் மோகம் வியாதி ஆசை லோபம் மமதை முதலானவைகளை விளைவிக்காநின்ற மனமானது சத்துருவாயும் அசத்தாயும் ஆத்மத் துரோகியாயும் இருப்பதால் அதை ஸ்ரீஹரியினுடைய பாதாரவிந்த உபாசனையாகிற அஸ்திரத்தினால் சேதிக்கக் கடவாய்" என்று கூற, ராஜாவானவர் ஜடபரதரை நோக்கி "சுவாமின்! உம்மை நமஸ்கரிக்கிறேன். உமது வார்த்தைகளைக் கேட்கக் கேட்க எனக்கு ஆனந்தம் அதிகரிக்கின்றது. ஜ்வரவியாதியினால் பீடிக்கப்பட்டவனுக்கு மதுரமான அவிழ்தம் போல, நிந்திக்கத்தக்க தேகாபிமானமாகிற சர்ப்பத்தினால் தஷ்டிக்கப்பட்ட எனக்கு உமது வசனாமிர்தமானது அவிழ்தமாயிருக்கின்றது. எனக்குச் சந்தேகமாயிருக்கிற விஷயங்களைப் பற்றிப் பின்னை கேட்கிறேன். தமை பெறுகிறதினாலுண்டாகிற

இப்படிப் பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டிருக்கும் அது வியவகார மாத்திரமேயல்லாமல் யதார்த்தமாக விசாரிக்குமிடத்து இல்லையென்றருளியதில் என் மனம் பிரமிக்கிறது. அந்தப்பிரமை தீரும்படி யனுக்கிரகிக்கப் பிரார்த்திக்கின்றேன்." என்று வேண்ட, முனிவரும் அரசனைப்பார்த்து "பிருதிவிமயமான இரதத் தேசம் ஒருகாரணத்தினால் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றது பிருதிவிமயமான ரதத் தேசம் சஞ்சரியாமலிருக்கின்றதோ அது ஸ்தாபரமென்று சொல்லப்படுகின்றது. பூமியின் மேல் பிருதிவிமயமான பாதமும், அதன்மேல் பிருதிவிமயமான கணைக்காலும், அதன்மேல் பிருதிவிமயமான முழங்காலும், அதன்மேல் பிருதிவிமயமான தொடையும், அதன்மேல் பிருதிவிமயமான இடையும், அதன் மேல் பிருதிவிமயமான மார்பும், அதன்மேல் பிருதிவிமயமான கழுத்தும், அதன் மேல் பிருதிவிமயமான தோளும், அதன்மேல் பிருதிவிமயமான பல்லக்கும் அதன்மேல் பிருதிவிமயமான சவ்வீர ராஜன் என்கிற பெயரை யுடைய (உனது) சரீரமும் இருக்கின்றது. எல்லாம் பிருதிவிமயமாயிருக்க, நீயோ உன்னைச் சரீரமென்றெண்ணிக் கொண்டிருக்கின்றாய்; அதனால் அதற்குண்டாகும் வருத்தமெல்லாம் நீயடைந்து வருகின்றாய். சரீரமோ பிருதிவிமயமாயிருக்கின்றது. பிருதிவியும் பரமாணுக்களின் கூட்டமாயிருக்கின்றது. பரமாணுக்கள் மனதினால் கற்பிக்கப்பட்டனவேயன்றி வேறன்று. இங்ஙனம் பிருதிவியாதி சகல தோற்றங்களும் மனதின் கற்பனை யென்றும் ஞானசொரூபமாயும் கர்மசம்பந்த ரஹிதமாயும் ஏகமாயும் பரிபூரணமாயும் நித்தியமாயும் சுயம்பிரகாசமாயும் சகல தோற்றங்களுக்கும் ஆதாரமாயும் இருப்பவர் வாசுதேவரே யென்றும் திடமாயுணர்ந்தவனுக்கு எவ்வித துக்கமும் உண்டாகாதலின்று. இந்தகைய மெய்ஞ்ஞானம் மகாத்மாக்களுடைய சேவையன்னியில் தபசு யாகம் வேதாப்பியாசம் முதலானவைகளினால் அடையப்படமாட்டாது.

"ஹோ! அரசனே! தாண்டக்கூடாததான சம்சாரமென்னும் வனத்தில் ஜீவர்கள் காலுபக்கமும் ஓடிக்கொண்டு திரிகின்றார்கள். விஷயங்களெனனும் கைப்பான பழங்களைப் புசித்து துக்கத்தை யடைகின்றார்கள். இவர்கள் வாளுனை வீரனாகக் கழிக்கிறவர்களேயன்றி ஜன்ம சாபல்யத்தை யடைபவர்கள் அன்று. சதி வீரர்களையும் திசைகளையும் ஜெயித்தவர்களாயுமிருக்கிற சாஸ்திரபாண்டிதர்களும் பூமிக்கு மித்தியமாய் ஒருவரை யொருவர் எதிர்த்து மாண்டுபோகின்றார்கள். சகலத்தையும் வெறுத்த பக்தர்கள் எந்தபதவியை யடைகின்றார்களோ அதை இவர்கள் அடைகிறதில்லை. சம்சாரவனத்தில் அடைந்து உழலாநின்ற நீயும் இராச்சிய பரிபாலனத்தை விட்டு சகல பிராணிகளிடத்தும் கருணைய முடையவனாயிருந்து ஸ்ரீஹரியினுடைய பாதாரவிந்தங்களைச் சேர்ந்தடைவாய்' என்றித்தப்பிரகாரம் உபதேசம் செய்த பரதயோகியைப் பார்த்து அரசன் "ஸ்வாமீ, பிராமணோத்தமரே! சமஸ்த ஜென்மங்களிலேயும் மனுஷிய ஜென்மமே சிரேஷ்டமானதாயிருக்கின்றது. தேவாதி ஜென்மங்களிலேயும் என்ன பிரயோஜனம். எந்த ஜென்மத்தில் ஹரிகதைகளுடைய அனுபவத்தினால் நிர்மலமான மனதையுடையவர்களான உமதுபோலொத்த மகாத்மாக்களுடைய சகவாசம் உண்டாகவதாயிருக்கின்றதோ அதுவன்றோ மிக்க மேலானது? ஒருமுகூர்த்த காலம் உம்மோடு சகவாசம் செய்ததால் என்னுடைய குயுக்தி மூலமான அவிவேகம் நசித்துப் போயிற்று. இப்படிப்பட்ட பாகவதர்களுடைய சரணாரவிந்த தூளிகளினால் சகல பாவங்களும் நாசமாகின்றன என்பதில் தடை யென்ன?" என்றித்தப்பிரகாரம் ஸ்தோத்திரம் செய்து நமஸ்கரித்தான்.

இத்தனை மகிமையையுடைய பரதரானவர் காமக்குரோதாதிகளை விட்டு நிர்க்கிய மனதை யுடையவராய் வெகுகாலம் பூமி யெங்கும் சஞ்சரித்துக்கொண்டிருந்து அப்பால் விதேக முக்தியைப் பிராபித்தார். நண்பர்களே! இப்பரதருக்கு ஞானம் எவ்வளவோ பூர்த்தியாயிருந்தும் ஒருமானினிடத்துண்டான பற்றினுல் திரும்பவும் ஜென்மம் ஏற்பட்டதைக் கவனித்தீர்களா? என்ன ஆச்சரியம்! ஆசையானது இம்மியளவேனும் உளதாயின் துக்கமென்னும் அலைகள் மோதாநின்ற பிறவிச்சாகரத்திலழுந்தும்படிக்கு அலையவேண்டுவதுதான். அதனுற்றான் பிறவியின் துன்பத்தை யோர்ந்த விவேகிகள் இச்சையையொழிக்க முயல்கின்றனர். ஆசையால் நாமும் வைராக்கிய மென்னும் ஆயுதத்தைத் தரித்துக் காமாதிகளை யெதிர்ப்போமாயின் பரதர் அடைந்த மோக்ஷ வீட்டைப் பிராபிக்கலாம். இது முதலேனும் இறையளவு காலமும் தாமசியாது அதற்கு வேண்டிய முயற்சி புரிவோமாக.

V. சண்முகம்பிள்ளை.

# A GUIDE TO LIFE.

## வாழ்க்கைத் துணைவன்

இவ்வுலகத்தில் உள்ள ஜீவராசிகள் எல்லாவற்றிலும் தாழ்மையானது "புல் மரம் முதல வுற்றறிவு மோரறி வுயிர்" என்றபடி ஓரறிவினை யுடைய புல், மரம், முதலியன. இவைகளினுஞ் சிறந்தது "முரள் நந்தாதி நாவறிவொ டீரறிவுயிர்" என்றபடி ஈரறிவினையுடைய நத்தை, சங்கு முதலியன. இவற்றிலும் சிறந்தது "சிதலெறும் பாதி மூக்கறிவின் மூவறிவுயிர்" என்றபடி மூவறிவினையுடைய செல்லு, எறும்பு முதலியன. இவற்றைப் பார்க்கிலும் சிறந்தது 'தும்பி வண்டாதி கண்ணறிவி னாலறி வுயிர்" என்றபடி நான்கறிவினையுடைய தும்பி, வண்டு, நண்டு, தேனீ முதலியன. இவற்றிலும் மேம்பாடுள்ளது "வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி செவியறிவோ டையறிவுயிரே" என்றபடி ஐயறிவினை யுடைய தேவர், மனிதர், நரகர், விலங்கு, பக்ஷிமுதலியன. இவருள் தேவரையும் நரகரையும் பற்றி யாமிங்கு பிரஸ்தாபிக்க வேண்டியதனாவசியம். ஆகலின் எஞ்சிய, மனிதர், விலங்கு (மிருகம்), பக்ஷிமுதலிய வைகளில் மனிதரே சிறந்தவர். இவர்யாவர்க்கும் ஆகாரம், நித்திரை, பயம், முதலியன சமமாயிருக்க மனிதரே விசேடமென்று சொல்வது எங்ஙனம் பொருந்து மெனின், அவ்விதமான ஆகாராதி மற்றவைகளுக்கும் உண்டாயிருப்பினும் அவற்றிலும் மனிதர் கார்ப்பும், புளிப்புந், துவர்ப்பு, உவர்ப்புக், கைப்புத், தித்திப்புமுதலிய அறுசுவை யுண்டிகளை அறிந்திட்டு இலை, கலம் முதலியவைகளில் இட்டு அருந்துதலினாலும், இங்ஙனம் அருந்தப்பட்டவை ஜீரணமாகாவிட்டால் தகுந்த மருந்துண்டு ஆகாராதிகளை ஜீரணமாக்கிக் கொள்வதனாலும், பசி உண்டாகாத போது தகுந்த மருந்தயின்று பரிகாரம் செய்து கொள்ளுதலினாலும், துண்ணிய பஞ்சணையின் மேல் தலையணை கொட்டை முதலியவை பரப்பிக்கொண்டு நித்திரை செய்தலினாலும், நித்திரை வாராதவிடத்தும் நித்திரை பங்கம் உண்

*நரகர் என்பது நாகர் என்பதன்றிரிபு; பாதாள லோகத்தவர் எனப்பொருள் படும். தேவர், மக்கள், நரகர் என்பவர்கள் ஸ்வர்க்க, மத்ய, பாதாள லோகத்தவர்கள்.

டானதற்கு மூலம் இன்னதென்று அறிந்து அவற்றிற்கு ஔஷதத்தைச் சாப்பிட்டு நீங்கினை வருவித்துக் கொள்ளுதலினாலும், அச்சமடைந்த காலையிலும் ஆழ்ந்து யோசித்து அதற்கேற்ற தந்திரம்செய்து பயத்தை நிவிர்த்திபண்ணிக் கொள்ளுதலினாலுமே. இக் கூற்று,

"ஆறுசுவை யோ டருந்துதனுண்பஞ் சணைதுயிறல்
.................................................
தேறிவிசாரத்தி னுணர்ச்சிக்குத நேறின்மண்மேல்
வேறுமுயிர்க டமக்கின்மையானார் மேலென்பவே"

என்ற வான்றோர் வாக்கினால் நிதர்சனமாயிற்று. இதை யறிந்தன்றோ "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்" என்றும் "ஜந்தூநாம் நரஜன்மதுர்லப:" என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

இங்ஙனம் பிறந்த மனிதர் இவ்வுலகத்தில் அடையவேண்டியவை நான்கென்பர். அவைகளைத்தான் சதுர்வித புருஷார்த்தம் என்றும் சொல்லுவர். அவையாவன:— அறம், பொருள், இன்பம், வீடு (தர்மார்த்த காமமோக்ஷம்) என்பனவாம். இவற்றுள் அறம், இல்லறம்—துறவறம் என இருவகைப்படும். பொருள், செல்வப்பொருள்—கல்விப்பொருள் என இருவகைப்படும். இன்பம், சிற்றின்பம்—பேரின்பம் என இருவகைப்படும். பேரின்பம் என்பது வீட்டையே (மோக்ஷம்) யாகலின் வீடு என்று மிகைபடக் கூறற்பாற்றன்று. ஆகவே மனிதன் அடைதற் குரியவை அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமே. இவற்றுள்

"வடுவிலாவையத்து மன்னிய மூன்று
னடுவணதெய்த விருதலையு மெய்தும்"

என்ற வான்றோர் வாக்குப்படி செல்வப் பொருளை யடைந்தவன் இல்லறவாழ்க்கையில் நெறியுடன் நின்று சிற்றின்பத்தை யடைவன். கல்விப் பொருளை யடைந்தவன் துறவறவாழ்க்கையில் நின்று அந்தமில் பேரின்பத்தை யடைவன். செல்வப்பொருளையடைந்தவனும் கல்விப்பொருளை யடைந்துஅதனால் துறவறமும் பேரின்பமும் கைக்கொள்ளவும் நேரும் கல்விப்பொருளை யடைந்தவனும் செல்வப்பொருளை யடைந்து அதனால் இல்லறத்தை நடாத்துதலும் கூடும்.

கல்விப்பொருளை யடைந்தவன் செல்வப்பொருளை யடையாது இல்வாழ்க்கைக் கவசியமான மணத்தைச் செய்துகொண்டு, அதிதிபூஜை, பிதிர்களுக்குப் பூஜை, முதலிய பணமின்றி நடவாத கிரியைகளைச் செய்து இல்லறத்தை வழுவாது நடத்துதல் அமையாது.

(இன்னும்வரும்).

வானமாமலை நரஸிம்மாசாரி.

---

நீ துக்கத்தை விரும்புவாயானால், உன்னையே பற்றியோ, உனக்குவேண்டியதைப்பற்றியோ, நீ விரும்பு வதைப்பற்றியோ' உனக்கு ஜனங்கள் செய்யவேண்டிய மரியாதையைப்பற்றியோ நினைக்கக்கடவாய். நீ தொடுகிற ஒவ்வொன்றையும் கெடுத்துப் போடுவாய். கடவுள் உனக்களிக்கும் ஒவ்வொன்றிலிருந்தும் பாபத்தையும் துக்கத்தையும் சம்பாதிப்பாய்; நீ நினைக்கிறபடி மிகவும் கெட்ட நிலையை அடைவாய்.—Mind.

# STUDENTS' COLUMN.

## மாணவர் பக்கம்.

# DAKSHANAMURTHI SYMBOL.

## தக்ஷிணாமூர்த்திவிக்கிரகம்.

(தொடர்ச்சி)

இப்போது தக்ஷிணாமூர்த்தி விக்கிரகத்தையே நன்றாய் ஆராய்ந்து பார்ப்போம். தக்ஷிணாமூர்த்தி ஒரு முனிவடிவாய் ஒரு ஆலமரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இம்முனிவடிவு குருவை உணர்த்துகின்றது. முன்னாளில் குரு சிஷ்யனுக்குஉபதேசம் பண்ணும்போது ஆசிரமத்தின் அருகில் உள்ள ஒரு ஆலமரத்தினடியிலே செய்வது வழக்கம். இக்குரு எந்த மாதிரியான அவஸ்தையி லிருக்கிறார் என்று பார்ப்போம். ஒரு உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு தொங்கவிட்டிருக்கும் தனது வலது காலால் ஒரு அரக்கனை நசுக்கிக் கொண்டிருக்கிறார். இடது காலை மடக்கி வலது முழந்தாளின் மீது வைத்துக் கொண்டிருக்கிறார். தன் அரையிலோ தான் கொன்றபுலியின்தோலை அணிந்து கொண்டிருக்கிறார். இவ்விடங்களில் எல்லாம் தக்ஷிணாமூர்த்தி விக்கிரகமானது நடராஜவிக்கிரகம் போலிருக்கிறது. முன எழுதிய நடராஜ விக்கிரகத்தை வாசித்தவர்களுக்கு இவைகளின் அந்தரார்த்தங்கள் விளங்கும். ஆகையால் இப்பொழுது நான் மறுபடியும் எழுதவேண்டியதில்லை.

இவ்விக்கிரகத்திற்கு நான்கு கைகளிருக்கின்றன. அவைகளில் ஒரு வலதுகையில் உடுக்கும், ஒரு இடது கையில் அக்கினியும் வைத்திருக்கிறார். சிரசில் கங்கையையும் சந்திரனையும் அணிந்துகொண்டிருக்கிறார். இவ்விஷயங்கள் நாம் நடராஜவிக்கிரகத்திற்கும் இதற்கும்பொதுவானவை. பின் வருவனவெல்லாம் இவ்விக்கிரகத்திற்கே சிறப்பானவை.

இவ்விடத்தில் நடனம் போன்ற சலனம் கிடையாது. இது உணர்த்துவது யாதெனில் ஒரு குரு தனது சிஷ்யனுக்கு உபதேசம் செய்யும்பொழுது சில விஷயங்களை உபதேசம் செய்து தான் எவ்வாறு சிஷ்யனை அப்பியசிக்க வேண்டுமென்கிறாரோ அவ்வாறே தானும் இருந்து காட்டுவார். குரு இருக்கும் நிலையையும் அவருக்கு உண்டாகும் ஆனந்தத்தையும்பார்த்தால்தான் சிஷ்யனுக்கு தானும் அவ்வாறு இருப்பது சுலபமாயிருக்குமே என்ற அபேக்ஷா உண்டாகும். உடனே அவனுக்கு சகாயமாய் குருசெய்த உபதேசம் முன்னின்று நிற்கும். ஆகவே அவன் சித்தியை அடைவான். இவ்விடத்தில் தக்ஷிணாமூர்த்தி மௌனமாய் நிச்சலமாய இருந்தாலும் சிஷ்யர்கள் அதை நன்றாய் கிரகித்துக் கொள்வார்கள். ஆகவே அசையாதிருத்தலினால் அந்நிலையை அடைவோன் ஒன்றையும் பாராட்டானென்பது விளங்கும். ஒரு வலது கையில் சின் முத்திரை யிருக்கிறது. அமைதிகாட்டுவதுபோல் கையைமடித்து கட்டைவிரலின் நுனியையும் ஆட்காட்டி விரலின் நுனியையும்சேர்த்தால் அந்த அடையாளத்திற்கு சின் முத்திரை யென்று பெயர். இது ஞானோபதேசம் செய்யும் பொழுது குரு காட்டும் அடையாளம். தக்ஷிணாமூர்த்தி மௌனமாய் இருந்தபோதிலும் இம்முத்திரை போட்டிருப்பது தனது சிஷ்யர்மனதில்

ஓம்தத்ஸத். தத்துவமஸி முதலிய மகாவாக்கியங்கள் எப்பொழுதும் வந்து கொண்டிருக்கும்படி செய்யும். ஒரு இடத்தில் எடுபிடித்திருக்கிறார். வாசித்து சாரத்தை கிரகித்து அமைதியாய் இருத்தல்வேண்டுமென்பதை அசையுணர்த்துகிறது. இவ்விடத்தில் வாசிப்பு என்பது உபநிஷத்முதலிய மோக்ஷ கிரந்தங்களைப் பற்றியது.

ஆகவே இதன் உள்ளர்த்தமென்னவெனில் குரு சிஷ்யபாவம். இதைவிட்டு சற்றுமேலே சென்றால் எல்லாச்சிஷ்யர்களும் தகுந்த பழக்கங்களினாலே அக்குருவின் நிலையை அடையப்போகிறார்கள்தான். ஆகையால் இதன் அர்த்தம்மேலான நிலை என்பதுதான். அந்நிலையில் துவந்துவாதிகளெல்லாம் இவனை வருத்தா. வெளியில் எவ்வளவு குழப்பங்களிருந்தாலும் அவை அந்நிலையை அடைந்த ஒருவனை பாதிக்கமாட்டா அவன் அமைதியாய் மௌனமாய் இருப்பான்.

ஆகவே இவ்விக்கிரகம் எவ்வளவு சிறந்ததாய் இருக்கிறது பாருங்கள். இவைகளைத் தரிசித்து அர்த்தங்களை மனதில் பதிப்பது நமக்குச் சிறந்தமுத்திநிலையை கொடுக்கும். ஆகையால் விக்கிரக ஆராதனையைப் பழிக்கு நண்பர்களே! அவசரமாய்க்கண்மூடித்தனமாய் இனிமேல் பழிக்காதேயுங்கள். அதில் எவ்வளவு நன்மையுண்டாகிறதென்பதைஉள்ளத்திலமைத்து, அதன் உள்ளர்த்தங்களை நன்றாய் கிரகித்துச் சிறந்தபயனையடையுங்கள். விவேகானந்தர் இதைப்பற்றிப்பின் வருமாறு உரைக்கின்றார்:-"நானும் சிறுவயதில் விக்கிரகாராதனையையிகழ்ந்துகொண்டு தான் இருந்தேன். அந்த கர்வம் அடங்கும்படி விக்கிரக ஆராதனையாலேயே சிறந்த ஸித்தியடைந்த ஒரு குருவை நாடவேண்டிவந்தது. ஜாக்கிரதையாய் இருங்கள். விக்கிரக ஆராதனை இராமகிருஷ்ண பரமஹம்சரையொத்த பெரியோர்களை உண்டாக்குமேயானால் உங்களுக்கு அதை விட வேண்டுமென்ற எண்ணம் எப்படிவரும். ஆகையால் நீங்கள் சொல்வதெல்லாம் வீண் பேச்சு. ஒரு இந்துவும் விக்கிரக ஆராதனையை மனதாரப் பழிக்கமாட்டான்".

ஆ. சீ. க.

தன்னுடைய கெட்ட நிலைமைக்காகப் பிறரை நிந்தித்தல் அதமனுடைய செய்கை; தன்னையே நிந்தித்துக் கொள்ளல் மத்திமன்செய்கை; தன்னையும் பிறரையும் நிந்தியாதிருத்தல் உத்தமனுடையசெய்கை.—Epictetus.

***

தர்மம் என்று சொல்லப்படுகிற தேவதூதன் ஒருவன் இருக்கிறான். அவனை உள்ளே விடுவோமானால் எத்தனையோ தொந்தரைகளிலிருந்து நம்முடைய ஹிருதயத்தை இரக்ஷிப்பான்.—Mary Mapes Dodge.

***

தன்னைப்பூரணமாக்க எவன் பிரயாசிக்கிறானோ அவனே மிகவும் நல்லவன்; தான் பூரணமடைந்து வருவதாக எவன் உணருகிறானோ அவனே அதிகசுகமடைந்தோன்.—Socrates.

***

நமக்குள் ஒவ்வொன்றும் சரியாயிருக்கும்பொழுது நாமும் கடவுளுடைய எல்லா சிருஷ்டிப்பொருள்களின் நிலைமைகளுக்கும் பொருத்தமாயிருக்கிறோம்.

—Mind

# REVIEWS

The *Arena* is the leading American Journal of social advance. A special feature of this Magazine from the April number is the publication of the lives of those Americans who are on the vanguard of social progress, and who scorn delights and live laborious days solely with a view to make their nation lead atruer, nobler, purer, and higher life. "In every nation", the Bible says "he that eareth Him and worketh righteousness, is accepted with Him". The progress of every nation is due to its great men who have not been rich in worldly goods, or who have turned their backs on wealth position or social advancement. Earnest H. Crosby is one of those men who have placed their lives at the service of humanity. His study of Count Tolstoy's works chiefly the one called" Life" was the turning point of his career. He resigned his high position of Judge of the International Tribunal at Alexandria because he was "at war with himself". Ever since he is fighting for the cause of freedom, righteousness and progress and sowing peace and good will throughout the land.

The article on Prof Fiske and the New Thought is a very interesting study. It has always been regarded by scientists that there is a conflict between science and religion. It is said that the law of evolution has exploded religion altogether. Prof Fiske in his book "Through Nature to God" exposes the falsity of this view, and justifies from a scientific standpoint the existence of evil in the world, the presence of a Moral law in the universe, the conception of God, and an after life. We hope to translate this article in a subsequent issue.

The journal gives us high class matter on several social topics and can be had for 12 shillings from the Alliance publishing Co. "Life" building, New york.

The *Sphinx* is an astrological Magazine ably edited by Catherine H. Thompson and published by the Pyramid publishing Company, 336, Boylston street, Boston, Mass U. S. A. It is the fashion now a days in India to cry down astrology, and educated men do not even take the trouble of investigating the truth or otherwise of this science. This attitude is, to say the least of it, unscientific. An earnest enquirer after truth must always have an open mind. That astrology is a true science, and that planets have in reality an influence over mundane objects will be apparent to readers of this Magazine whose Editor spares no pains to give them good and thoughtful matter. Her article on Birthday Information and Daily Advice contains a mine of information and is a very profitable study even to the general reader. Old records are unearthed in the journal and ancient prophecies are explained. The Astrologer is an indispensable factor in a Hindu house-hold and the life of every Hindu from the cradle to the grave is one series of religious ceremonies in which the astrologer is consulted on every matter, be it great or small. The Journal must therefore certainly have a wide circulation in this land of astrology. An advertisement of the Magazine appears elsewhere.

We regret that for want of space we have refrained from reviewing the other magazines in this issue.